ஓலை 43 | ஓசை 150 | ஜூலை 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகரமும் தமிழே!
முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி உணின்.**

முன் உண்ட உணவு செரித்த தன்மை ஆராய்ந்து போற்றியப் பிறகு
தக்க அளவு உண்டால்,
உடம்பிற்கு மருந்து என ஒன்று வேண்டியதில்லை.

**Translation:**

No need of medicine to heal your body's pain,
If, what you ate before
digested well, you eat again.

**Explanation:**

No medicine is necessary
for him who eats after assuring
(himself) that what he has (already)
eaten has been digested.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்



### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

Aagaramuthalaa www.அகரமுதல.com aagaramuthala@gmail.com

# தமிழ்த் தாகம்

தமிழை உச்சரிப்பதில்
தளராத சுகமுண்டு
மொழியை வளர்ப்பதில்
சகலருக்கும் பங்குண்டு



எதுகை மோனையில்
இன்பம் நிறையுண்டு
பொதிகை மலர்களிலும்
வாசம் தானுண்டு

பிறமொழிகளில் இல்லாத
பல்வேறு சிறப்புக்கள்
தாய்மொழி தமிழின்
தனித்துவம் தானன்றோ!

இரட்டைக்கிளவி
இணை மொழி அடுக்குத் தொடர்
இசையின்பம் ஈந்தே
இதயம் நனைத்திடும்

மரபுத் தொடர்கள்
உவமைத் தொடருடன்
உவமான உவமேயங்கள்
உள்ளத்துக்கு உரமாகும்

ஒற்றைச் சொல்லுக்கும்
ஒவ்வொரு அர்த்தங்கள்
ஒப்பற்ற விளக்கத்தால்
ஓரெழுத்தும் உயிராகிறது

வண்கை உள்ளங்களையும்
வாழ்த்துரைக்கும் சுருதியாம்
செந்தமிழ் தாகம்
செத்தாலும் அழியாது

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர்,இலங்கை

# தோல்வி நிலையென நினைத்தால்

அச்சமின்றி வாகை நோக்கிய பயணத்தில்
துச்சமென தடைகளை தகர்த்து நட

ஆயிரம் தோல்விகளை தொட்டுத்தான் கண்டான்
வெற்றியின் உச்சத்தை மிங்குமிழில் எடிசன்

துப்பாக்கி தொட்டாவை நெஞ்சில் வாங்கியபின்
பெண்கல்வி கனவில் வென்றாள் மலாளா


வறுமை தனக்கு தடையில்லை என்று
சாதித்து காட்டினார் அக்னி நாயகன் அப்துல் கலாம்

நிறவெறி அராஜகத்தின் முன் நிமிர்ந்து நின்று
கருப்பின ஒடுக்கத்தை ஒழித்தான் மார்ட்டின் லூதர் கிங்

சொல்லிக் கொண்டே போனால் அடங்காது
சாதனை நாயகர் சரித்திர பட்டியல்

பிறப்பிலேயே பலகோடி உயிரணுலோடு வென்றவனே
உனக்குள் ஏனிந்த தயக்கம்

கட்டபொம்ம நாட்டின் சிம்ம நெஞ்சனே
மனதில் நிலைகொண்ட இயலாமையை எரித்துவிடு



இயலாமை களையகற்றி துணிவை நீ விதை
முயற்சி எனும் தூறலை தூவு

வாகை மழை சாரலாக பொழியும்
சரித்திரம் சந்தம் கொண்டு ராகமிசைக்கும்

கவிஞர் அமீன் பவாஸ்,இலங்கை

# துளிப்பாக்கள்

1. முகப்புச் சாளரம்
பசியில் கரையும்
காகம்

2. தாளாத உயிர் வலி
முடிவில் பிறக்கும்
அன்னையின் புன்னகை

3. பழைய சுவர்கள்
தாங்கி நிற்கின்றன
தட்டிய வரட்டிகள்

4. முக்காடிட்ட போர்வை
காதில் ஒலிக்கிறது
அம்மாவின் சுப்ரபாதம்

5. கிழிபடும் நாட்காட்டி
தினமும் வளர்கிறது
கிழிப்பவன் வயது

6. முத்தமிடும் மகளிடம்
மாறவில்லை பால் மணம்
சிணுங்கும் பேத்தி

7. வெண்ணிற ஆடை
விற்பனை ஆகவில்லை
பூச்சரம்



கவிஞர் ரவிஜி


# மாற்றம் ஒன்றே மாறாதது

மாற்றம் ஒன்றே மாறாதது.
மாற்றம் ஒன்றே நிரந்தரம்.
மாற்றம் வந்தால்
காட்சிகள் மாறும்.

காட்சிக்கேற்ற சூழலுக்கேற்ப
வேட்கையோடு நம்மை
செதுக்கிடக் கசப்பகற்றி
களிப்போடு வாழலாம்.

மாறுவதை ஏற்றிட
மனதில் அமைதி பிறக்கும்.
கட்டுப்பாடு அற்றவற்றைத்
தட்டாமல் ஏற்றிடல் நன்று.

மாற்ற முடிந்ததை
மாற்ற முயற்சிக்கலாம்.
சோம்பலை மாற்றலாம்
சுறுசுறுப்பாய் மாறலாம்.



மாறிக்கொண்டே இருக்கும்
மனவோட்டத்தைத் தடுக்கலாம்.
பாதைகள் மாறலாம்
பயணங்கள் மாறலாம்.

வாழ்க்கைப் பயணம்
மாறும் இயல்பினது.
பருவங்கள் மாறும்
கருத்துகள் மாறும்

இளமை அகன்று
முதுமை வரும்.
மாற்றத்தை ஏற்காவிடில்
வருவது ஏமாற்றமே!

கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# சருகும் நானும்

கீழிறங்கும் சருகு
அதனுடன் சேர்த்து
மெல்ல தரை இறக்குகிறது
என்னையும்.
என் எடையும்
சருகின் பாரமும்
ஒத்தே இருப்பதாய்
பொய் சொல்கிறது காற்று.
இருப்பினும்
யார் முதலில்
தரை இறங்குவதென
போட்டி இல்லை
எங்களுக்குள்.
எங்களை
வரவேற்க வந்த
இந்தக் கவிதைச் சொல்லும்
சருகும் நானும்
பகைவர்கள் அல்ல
உற்ற நண்பர்களென்று.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# ஹைக்கூ

பள்ளி முடிந்ததும்
சிறுவர்களை அழைக்கிறது
நாவல் மரம்.



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# புதிர்கள்

புரிதலுக்கு புதிதாய் புதிர் போட்டு
அடக்க நினைக்கும் குணம்
அழியா உறவு ஆழிக்கு செல்கிறது
அடிப்படை கணக்கு தெருவிற்கு சென்றது
எழுதி கொடுக்க எண்ணமும் கேட்டது
எழுத்தை தர எழுதுகோள் மறுக்கிறது
எண்ணத்தை வெளிப்படுத்த
வெள்ளைத்தாள் எங்கே?
வெள்ளைத்தாள் ஒரு புறம்
எழுதுகோல் மற்றொரு இடம்
இணைந்தால் மட்டும்
வெள்ளைத்தாளில் எண்ணம் வெளிப்படும்



கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# கொடூர விபத்து

கொட்டலியில் நடந்தது
கொடூர விபத்து
கொண்டு சென்றவர்களைக்
கொட்டிவிட்டு ஆற்றிலே
மூழ்கிற்று பேருந்து

மன்னம்பிட்டியிலே மடிந்தன
பல உயிர்கள்
மயிரிழையில் உயிர் தப்பின
சில உயிர்கள்

பெருஞ்சத்தத்தோடு இடிந்து
நொறுங்கிப் போயின கனவுகள்
இடையிலே முற்றுப்பெற்றன
வாழ்வின் பல பயணங்கள்

கணவனைப் பார்க்க
காதலியுடன் பேச
மருந்தகம் செல்ல
மணச்சம்பந்தம் பேச

கர்ப்பிணியும் நோயாளியும்
கடனாளியும் பணக்காரனும்
கிழவனும் சிறுவனும்
குழந்தையும் கனவானும்

எண்ணற்ற வேலைகள்
எதிர்பாராமல் உடைந்தன
இடிகண்ட நாகமாய்
இதயங்கள் பதறின

எத்தனை கூக்குரல்
இடர்களின் தவிப்பினில்
உயிர்தனைக் காத்திட
ஒலித்திட்ட ஒப்பாரிகள்



அதிகரித்த வேகமோ
அலட்சியப் போக்கோ
போதையின் பிடியிலோ
பீடித்த நித்திரையோ

ஏனிந்த அசமந்தம்
ஏடறியா மூடத்தனம்
உயிர்களின் இழப்புக்கு
இல்லையா இனி உத்தரவாதம்

விரைந்த பயணம் எதற்கு
வேறு சிந்தனையில்லையா சாரதிக்கு
வேதனையின் விளிம்பைத்தொடுவதற்கு
விர்ரென்ற வேகம் உமக்கு

காயப்பட்டவர்களும்
காலமானவர்களும்
கணங்கள் செல்லச்செல்ல
எண்ணிக்கையில் உயர

காப்பாற்றத் துடித்திட்ட
கயமையில்லா மனிதர்கள்
மீட்பு வாகனம் கொண்டு
மீண்டனர் வைத்தியசாலைக்கு

அலறித் தவித்த உறவுகள்
உலுக்கி எடுத்த அதிர்ச்சியில்
கனத்துக் கிடக்கும் நெஞ்சம்
காவுகொடுத்த கலக்கத்தில்

இப்படியொரு விபத்து
இனிமேல் வேண்டாம்
இறைவா உன்னிடம்
இறைஞ்சிக் கேட்கிறோம்
இகத்தினில் அமைதி
இழைந்திட வேண்டுகிறோம்

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# நாளை மாறும்

மனம் பதைப்பதைக்க
கண்கள் குளமாக
உயிர் துடிக்க உள்ளத்திலெழும்
ஆயிரமாயிரம் வேதனைகள்!
கண்ணுக்குத் தெரியாத
காலன் நம்மை கட்டி வைத்திருக்க!
கலங்கிடாதே மனமே!
மாற்றம் ஒன்றே மாறாதது!
தைரியத்தைக் கூட்டி
எழுந்து நின்றிடு!
காலனைக் காலால் உதைத்துவிடு!
நோயற்ற அன்புசூழ் உலகம்
நாளை நிச்சயம் மலரும்!
நாளைய சூரிய உதயம்
நமக்கானதாய் மாறும்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை.119

# நீதி தேவதை

ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே நீதி
நீதி தேவனின் கையில் தேடுகிறது நீதி
தீர்ப்பின் முடிவில் மானுடர் ஏமாற்றம்
அச்சத்தில் தவறு செய்யாதவன் மனம்
எங்கே சென்றது இந்த நீதி
பாவம் ஓரிடம் பழி ஓரிடம்
யாரே செய்த தவறுக்கு நிரபராதி தண்டிக்கிறானே
எதிர்த்து கேட்க மானுடர் இல்லையா
விழி திறந்து காட்டியது இல்லை
பாவம் ஏழையின் கையில் கட்டு
நாடி நரம்பு எல்லாம் அற்று
பரிதவித்து நின்றான் உண்மையான நீதி
எங்கே சென்றது கண்டு பிடிக்க
முடியாத நிலையில் குற்றவாளி ஆகின்றாரே



கவிஞர் ம.செ.அ.பாமிலா பேகம்

# சூழல் தேகம்

உலகு கோளில்
உயிர்களின் தோற்றம்
காலங்களில் மாற்றம்
உறைவிடம் அது பெருமிதம்
பிரபஞ்சத்தில்
இயற்கையே பெரும் சித்தாந்தம்
ஒரு நாடும் அதன் ஏடும்
காலத்தில் கால் பதிக்க
பல கால்கள் இழந்திருக்கும்
அடையாளத்தின் அறிவும்
கலங்காத நீர் போல்
கோட்டை கட்டி கொடி பறக்க
பாதுகாத்த பகைவன் யாரோ?




பாதிப்பில்லாமல்
மண்ணுக்கும் விண்ணுக்கும்
சொந்தம் கொண்டு காலம் கண்டு
விடை அறிய முடியாத வினாவில்.
இன்று விஞ்ஞானமும் தடுமாறுதே
கால சிதைவிலும் சிதைக்க முடியவில்லை
பழங்கால பாசறையை
இன்று தலை கொண்டு தலைகீழாக நின்று
நிம்மதி இன்றி அலையுதே
காலம் கருகி போய்
இயற்கைக்கு மாறாக மரணித்து
மண்ணுலகில்
தினம் பல மரணம்.

ஆராய வழி இல்லையே
அகிலம் நிலை இல்லையே

கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# நீயே வேண்டும்!




நீயும் நானும் அன்பே
உண்மை காதல் கொண்டு
மனதை மட்டும் பார்த்து
வாழ்வில் இணைந்தோமடா
என்றும் என் வாழ்வில்
துணையாய் நீயே வேண்டும்
என் காதல் உலகம் முழுதும்
நீ மட்டுமே வாழ வேண்டும்
என் கண்ணில் ஈரம் வந்தால்
துடைக்கும் கரமாக வேண்டும்
என் நெஞ்சில் பாரம் சேர்ந்தால்
பாரம் குறைக்கும் உறவாய் வேண்டும்
நெடு நேரம் பயணம் அதில்
என் கை உன் கையோடு பிணைந்து
காதல் சொட்ட கால் பதிக்க
எனக்கு நீயே வேண்டும்
என் மடியில் உன்னை சாய்த்து
உன் தலை வருடி தூங்க வைக்க
என் மடிமீது நீயே வேண்டும்
இரவு நேரம் அந்த கடற்கரையில்
நீண்ட நேரம் என்னோடு
நீ மட்டும் வேண்டும்
உன் கஷ்டத்திலும் நான் கை கொடுக்க
என் அருகில் நீ வேண்டும்
உன் வாழ்வை பங்கு போட
என்னோடு நீ வேண்டும்
உன் இன்ப துன்பங்களை பகிர்ந்து கொள்ள
உன் வாழ்வில் என்னருகில் நீயே வேண்டும்
மொத்தத்தில் என் உலகம் முழுதும்
நீ மட்டுமே வேண்டும்

கவிஞர் அகீலா ஜவுபர்,ஏத்தாளை புத்தளம் (இலங்கை)

# கல்வி

திக்கற்ற போக்கில் நகரும் வாழ்வை
திசையாக்கி உச்சத்தில் நிறுத்தும் பாடம்
வழியற்ற நிலையில் ஒளியேற்றும் தீபம்
உறவின் உரிமையை உள்ளத்தில் வளர்த்தி
அறத்தின் பலனை அகத்தில் உயர்த்தி
திறத்தின் தடத்தில் புகழினைப் பெருக்கி
வறுமையின் கோரத்தை வாராது அழித்து
நட்பின் இணைப்பில் நாலும் கற்று
அறிவின் வீரியத்தில் கருவிகள் கண்டு
வெளியின் வேகத்தை திறம்பட கையாண்டு
இல்லறத்தில் நல்லறம் பேண வழிகாட்டி
எல்லையற்ற கனவுகளை ஈடேற்றி மகிழ
தன்னைத் தான் உணர்ந்து கரைசேர
பிறப்பின் பயனை உலகிற்குச் சொல்ல
சமூகத்தின் நகர்வில் சமத்துவம் மலர
மனதில் விளையட்டும் அழிவற்ற கல்வி.



கவிஞர் இளையவன் சிவா,மடத்துக்குளம்

# தெரிந்து வினையாடல்

(அதிகாரம் 52)




நன்மைதீமை ஆய்ந்தறிந்து
நன்மையொன்றே தேர்ந்தெடுத்து.
நற்செயலுள் இறக்கிடும்
திறனையே தெரிந்திடல்நலம்.

தனவழிவிரித்து வளம்பெருக்கவும்
தடைவழிகுறுக்கி இடையூறறுக்கவும்.
வல்லோனையே பணியாற்ற
சிறந்தோனாய் கொளல்நலம்.

அன்பறிவு ஐயமில்லாத்தெளிவுடன்
பேராசையின்மையாம் இந்நான்கிலும்.
திண்ணமாய் நிற்போனையே
தெரிந்துபணித்தல் நலம்.

எவ்வகையில் தெளிந்தறிந்தும்
செயல்வகையில் பொருத்தமின்றி.
மாறுகொள்ளும் மாந்தர்கள்.
இவ்வுலகில் பலருளர்.

செயல்வழியறிந்து இடைவரும்
புயல்தாங்கி செல்பவனல்லாது.
மற்றெவனும் வல்லோனாய்க்கருதி
செயல்புரிய ஏவலாகாது.

செயலோனையும் அவன்செய்
செயல்களையும் ஆய்ந்தறிந்து.
நற்காலத்தின் பொருத்தமறிந்து
செய்விக்க ஏவல்நலம்.

இச்செயல் இக்கருவிக்கொண்டு
இவனே முடிக்கவல்லோன்.
என்றறிந்தபின்னே அச்செயலை
அவனிடமே அளித்தல்நலம்.

இவ்வேலைக்கு தகுந்தோன்
எவனொருவன் என்றாய்ந்து.
அவ்வேலைக்கு உரியோனாகும்படி
அவனொருவனையே ஏவல்நலம்.

தன்தொழிலின் ஏற்றத்தில்
முப்பொழுதும் முயல்வோன்மேல்.
ஐயங்கொள்ளும் தலைவன்விட்டு
திருமகள் நீங்கிப்போவாள்.

தொழிலோன் கோணாதிருக்க
தரணியும் கெடாதாகையால்.
திருக்கோமகன் தினமுமதை
ஆராய்ந்து அறிதல்நலம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா,நாகர்கோவில்

# சிலப்பதிகாரம் (ஒன்று)

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்
என்றொரு மணி ஆரம் படைத்த தமிழ்நாடு" - பாரதி

சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள்
(1) அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
(2) உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
(3) ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் .

சேரலாதனுக்கு இரண்டு பிள்ளைகள் செங்குட்டுவன், இளங்கோ
சேர மன்னன் செங்குட்டுவன் , துறவியான இளங்கோ அடிகள்
சரகம் பக்கத்தில் குணவாயில் கோட்டத்தில் இளங்கோ அடிகள்
பரமசாதுவான குறவர்கள் அடிகளின் அடிபணிந்து கூறியது

பொன்னிற பூக்கள் குலுங்கும் வேங்கை மர நிழலில்
தன்னியல்பு மாறாமல் ஒருமுலை இழந்த பத்தினி நிற்கிறாள்
இன்னியம் ஒலிக்க தேவர்கள் அவள் கணவனை சேர்க்க
கன்னியும் காதல் கொழுநனும் வானுலகம் சென்றார்கள்

இளங்கோஅடிகள் குழம்பி இருக்க அருகில் புலவர் சாத்தனார்
விளங்குமாறு எடுத்துச் சொன்னார் பத்தினியின் கதையை
களங்கமற்ற கண்ணகிக்கு நடந்த கொடுமையே இக்கதை
வளங்கொழிக்கும் வாழ்க்கை பாலையானது கோவலனால்




மணம் முடித்த கோவலன் இல்லறத்தில் நுழையவில்லை
சுணக்கமாக வந்தவளை விட்டு பரத்தையர் பின் சென்றான்
வணக்கமாக அவளோடும் வாழாமல் வீடு திரும்பினான்
பிணக்கமாக அவளைப் பிரிந்து பொருள் இழந்து வந்தான்

வந்தவன் பொருள்ஈட்ட கால் சிலம்பைக் கொடுத்தாள்
நொந்து அவன் பொற்கொல்லனிடம் விலை பேசினான்
இந்த நாட்டின் இளவரசி கோப்பெருந்தேவி சிலம்பு அது
எந்தப் பாவமும் அறியாத கோவலன் கள்வன் ஆனான்

அரசன் அவனைக் கொன்று சிலம்பைக் கொணர்க என்றான்
வரமாக வந்தவன் கொலையுண்டதைக் கேட்டாள் கண்ணகி
அரம்பையர் கண்ணகி மதுரையை எரித்து வான் புகுந்தாள்
தரமான இந்நிகழ்வை சாத்தனார் சொல்லக் கேட்டார் இளங்கோ

"வினையானது வினைவிக்கும் காலம், வினை என்பது யாது?
வினவியவர் அடிகள், புலவர் சாத்தனார் பதில் உரைத்தார்
மனைவாழ்க்கையில் சங்கமனும் நீலியும் மகிழ்ந்திருந்தனர்
இனைவாக நிகழ்ந்தது பரதன் என்பவன் சங்கமனைக் கொன்றது


நீலி இட்ட சாபம் கோவலனைக் கொல்லும் விளைவு ஆனது
பலியான கணவன் கள்வன் இல்லை நீதி கேட்ட கண்ணகி காதை
வலியின் வேதனையில் பாண்டிய மன்னனை மாய்த்த காதை
எளியோன் யான் சிலப்பதிகாரம் எனும் காப்பியம் படைப்போம்

****(சரகம் — நாட்டின் பகுதி, இன்னியம் — இசைக்கருவிகள்,
****அரம்பையர்- தேவமகளிர், எலியன் -சாதாரண, இனை - துன்பம்)

தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# காலத்தை வென்றவன்



வங்கக்கடலோரம் பிறந்த படகோட்டியின் மைந்தனே
பிஞ்சுவயதில் சேகரித்தாய்
போர்விமானியாகும் கனவுகளை
காலம் மாற்றியது உம்மை
அணு விஞ்ஞானியாய்

அறிவியல் தொழில்நுட்பங்களால் தேசத்தை
தலைநிமிரச் செய்த ஏவுகனை நாயகனே
பொக்ரைன் அணுஆயுத சோதனையால்
அண்டைதேசங்களும் அண்ணாந்து பார்த்தது
அப்துல்கலாம் யாரென்று

விஞ்ஞானத் தேடலில்
வானமாய் உயர்ந்த உம்மிடம்
பெருமைகொண்டது
நாட்டின் அத்துணை விருதுகளும்

பதவியும் பட்டங்களும் மாறிமாறி வந்தாலும்
ஒப்பனையும் எளிமையும் மாறாமல்
வாழ்ந்ததே முதல்குடிமகன் உம்சிறப்பு

கல்விச்சாலையெங்கும் பகட்டின்றி
உரையாடிய பல்கலைகழகமே
தன்னம்பிக்கை வார்த்தைகளால்
மாணவர் முயற்சிகளை செறிவூட்டினாயே

பிறப்புக்கும் இறப்புக்குமிடையிலிருப்பது
சரித்திரமாய் இருக்கட்டுமென
மனதினைத் திறந்த திறவுகோலே!

அதிகார மாளிகையின்
ஆடம்பர மரபுகளை உடைத்த உம்மிடம்
வம்புக்கு நின்ற வலிமைகளும்
தவிடுபொடியானது

உம்விரல்களில் விரிந்த
அக்னிச்சிறகுகளால்
இளைஞர் நரம்பெங்கும்
அறிவியல் இரத்தம் ஓடுதே

போலியோ குழந்தைகளுக்கென
நீதந்த நானூறுகிராம்
செயற்கை கால்களால்தான்
இந்நாடும் நகர்கிறது

உயிர்காக்கும் உபகரணத்தால்
இதயங்களை துடிக்கவைத்த
மகத்துவ கண்டுபிடிப்பின்
காப்புரிமை தொகையினையும் மறுத்து
காலத்தை வென்ற உம்சாதனைகளை
வரலாறும் நேசிக்கிறது.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# அணைப்பு

அன்னையின் அடர்இரவுநேர அணைப்பு
ஆதவனின் ஆக்கிரமிப்பான அணைப்பு
இணையாளின் இனிய நேர அணைப்பு
ஈசனின் ஈரெட்டு நேர்த்தில் அணைப்பு
உண்மை நட்பின் உற்சாக அணைப்பு
ஊக்கப்பரிசு ஊட்டிடும் அணைப்பு
எல்லோருக்கும் தேவையான அணைப்பு
ஏழையும் விரும்பிடும் அணைப்பு
ஐங்கரனின் அருளும்கூட அணைப்பு
ஒற்றுமையில் ஒளிந்திருக்கும் அணைப்பு
ஓடி விளையாண்டு விழும் சிசுவுக்கும் தேவை அணைப்பு
ஔசிதம் இல்லா மன நோய்க்கும் தேவை அணைப்பு.



கவிஞர் நீலா சுபாஷ்,ஆக்கூர்

# என்றுள் என்னவன்

பன்னிரண்டு மணி நேரமும்
என் சிந்தனையின் நாயகன் நீயே
பதினொன்று மாணிக்கம் கற்கள் நீயே
பத்துப்பாட்டு தலைவன் நீயே
ஒன்பது கோள்களையும் தன்னகத்து கொண்டவன் நீயே
எட்டு அதிசயங்களை மிஞ்சும் எட்டா அதிசயம் நீயே
ஏழுவகை வண்ணங்களை
என் மனதில் ஒளிர செய்யும் வானவில் நீயே
ஆறு சுவைகளை அறு சுவை ஆக்கியது நீயே
ஐவகை நிலத்திலும் என்னுடைய அயரா மன்னன் நீயே
நான்கு திசையிலும், என்னுடைய பிரதிபலிப்பு நீயே
முக்கனிகளையும் மிஞ்சும் இனிமையானவன் நீயே
இரட்டைகாப்பியங்களை தன்னகத்தே கொண்டவன் நீயே
ஒற்றை தலைவனாக என்றும் என்றென்றும் நீயே!




கவிஞர் பெ.சுரேகா,திண்டுக்கல்

# வஞ்சிக்கப்படும் வாழ்க்கை

அனைவருக்கும் கல்வி அடிப்படை
உரிமை என்ற அறிவிப்பு பலகை
அலுவலகங்களில் தொங்கிறது!
ஆசிரியர் பற்றாக்குறை என அரசு
பள்ளிக்கூடம் மூடப்படுகிறது!

கட்டணமில்லா பயணத்தை வழங்கி
கட்டண உயர்வை பரிசளிக்கும் கழகம்!
மேடையில் மது ஒழிப்பு பேசி
தெரு ஓரம் மது அங்காடி
திறக்கும் அவலம் இருக்கிறது!

நாகரிகத்தில் தன்னிறைவு கண்ட மண்
நேர்மையற்ற அரசியல் அடியார்களால்
அடையாளம் தொலைத்து நிற்கிறது!
நிறைவாக வாழ வேண்டிய வாழ்க்கை
நகரியம் பெயரில் வஞ்சிக்கப்படுகிறது!



கவிஞர் செ.தமிழ்நேயன்

# எழுத்தாணியே!

வியப்போடு வியந்து பார்த்த நாட்களும்
கண்ணீரில் சிரிப்போடு கட்டியணைத்த
அந்த மழைக்கால இரவுகளும்
என் நெஞ்சம் மறக்கவில்லை எழுத்தாணியே
அவமானத்தின் ஆதிவேரை அழிக்க
அவன் எனக்கு தன்மானம் அளித்தவன்
ஏமாற்றத்தை எண்ணி புலம்பாதே
வரும் மாற்றமே உனக்கானது என உரைத்தவன்
தோல்வியை நினைத்து கலங்கிய தருணம்
தன்னம்பிக்கையை எனக்கு அளித்தவன்
ஏக்கத்தில் நெடுநேரம் உன்னோடு கதைப்பேன்
துயரத்தில் உன்னோடு கண்ணீரில் கரைவேன்
என் மனவுடைந்த தருணத்தில்
உள்உறுதியை எனக்களித்தாய் எழுதுகோலே
எழுச்சியை நெஞ்சித்தில் விதைத்து
புதுபாதையை வாழ்வில் தொடங்கினாய்
ஏளனம் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்து
எழுத்தாளன் என்ற பட்டம் கொடுத்தாய்
கேலி செய்த கூட்டத்திற்கு பதிலடி நீ கொடுத்தாய்
என் கையில் நீ அமர்ந்த தருணம் எழுதுகோலே
ஏணியாய் எனக்கு ஏற்றத்தை தந்தவன்
எதிர்பார்ப்புமில்லாமல்
என்னோடு என்றும் இருப்பவன் எழுத்தாணியே!



கவிஞர் க.பூமணி,சென்னை-77

# ஆடி மாதம்

தமிழ் ஆண்டின் நான்காவது மாதமாய்
வலம் வந்திடும் ஆடி மாதமாம்




தேவர்களுக்கு உரிய மாதமாய்
உன்னதத்துடன் திகழும் மாதமாம்

ஆடிப்பெருக்கும் ஆடி அமாவாசையையும்
மறந்தவர் எவரும் இலரிங்கே

ஆடிப்பட்டம் தேடி விதை என்ற கூற்றுக்கிணங்க
விளைச்சலுக்கு முதன்மைப் படுத்தும் மாதமாம்

பெண்மை எனும் சக்திக்கு
பெருமைதனை தேடித் தரும் மாதமாம்

ஆடிக்காற்றில் அம்மியும் பறக்குமென்ற கூற்றுக்கிணங்க
சொல்லொண்ணா காற்றும் வீசிச் சென்றிடுமே

ஆடியிலே காற்றடிக்க
ஐப்பசியில் மழை பொழியும் என்ற கூற்றும் நிலவுதிங்கே

ஆடி மாதமதில் அம்மனையும் தரிசித்து
அம்மனருள் பெற்று அருமையாய் வாழ்ந்திடுவோமே!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# தேடல்

தனிமைப்பட்ட இந்த வாழ்க்கையில்
அனைத்துமானது ஒரு தேடல் தான்.
தனிமையே ஒரு தேடல் தான்
வாழ்க்கயே ஒரு தேடல்!
இவ்வுலகமே ஒரு தேடலால் ஆனது!
எங்கும் தேடல்! எதிலும் தேடல்!
தேடல் நிறைந்த வாழ்க்கை!




ஆதவனுக்கு விடியல் ஒரு தேடல்!
நிலவு மங்கைக்கு இரவு ஒரு தேடல்!
மேகங்களுக்கு நீலவானம் ஒரு தேடல்!
பறவைக்கு உயரம் ஒரு தேடல்!
வண்ணத்துபூச்சிக்கு பூக்கள் ஒரு தேடல்!
தேனீக்களுக்கு தேன் ஒரு தேடல்!
இருட்டிற்க்கு வெளிச்சம் ஒரு தேடல்!
உருவமில்லா அன்பு ஒரு தேடல்!
கள்ளமில்லா காதல் ஒரு தேடல்!

மனிதனுக்கு அனைத்தும் ஒரு தேடல்!
பள்ளிப்பருவத்தில் நண்பன் ஒரு தேடல்!
வாலிபப்பருவத்தில் காதல் ஒரு தேடல்!
திருமணம் என்ற பந்தத்தில்
வாழ்க்கைத் துணை ஒரு தேடல்!
இனிமையான நினைவுகள் ஒரு தேடல்!
வயது முதிர்ந்தால் முதுமை ஒரு தேடல்!

எவ்வித தேடலுமின்றி வாழ்வில் எதுவும் கிடைப்பதில்லை!
தேடலின்றி கிடைத்தாலும் நிலைப்பதில்லை!
இந்த தேடல் என்பது
வாழ்நாள் முழுவதும் என்றுமே ஓயாது!

தேடலுக்கு ஆரம்பமும் இல்லை!
தேடலுக்கு முடிவும் இல்லை!
உருவமும் இல்லை!
ஆனால்! அனைத்து தேடலும்
இறுதியில் வாழ்க்கைப் போராட்டத்தில்தான் முடிவடைகிறது!

கவிஞர் ர.ரமேஷ்,திருப்பூர்

# தன்னம்பிக்கை

உலகமே உன்னை எதிர்த்து நின்றாலும்
உயிரே போகும் நிலை வந்தாலும்
உயிராக நினைத்தவர்கள் கைவிட்டுவிட்டாலும்
உதறி தள்ளிக் கீழே போட்டாலும்

கால்களே தினம் தினம் ஓடட்டும்
காட்டு சிங்கமாய் வேட்டையாட ஓடட்டும்
காடு மேடு நடை போடட்டும்

காலில் முட்கள் குத்தி கிழிக்கட்டும்.
சொல்லடி மனதை சுட்டு பொசுக்கட்டும்
சொல்லொண்ணா துயரம் பாடாய் படுத்தட்டும்

சொந்த ஊரும் ஒன்றாகி விரட்டட்டும்
சொந்தங்களும் நடுத்தெருவில் விட்டுவிடட்டும்.
தவறு செய்யாமல் தண்டனை கிடக்கட்டும்
தள்ளி விட்டு சிரித்து மகிழட்டும்
தகுதி இல்லை என்று ஓரம்கட்டடும்
தரக்குறைவாய் பலகீனத்தை வைத்து ஏசட்டும்.



வலியோடு தினம் போராடு நீ
வலியாலே பிறக்கும் பல வழிகள்
வழியும் வலிமை பெரும் பொறுத்தால்
வளரும் குழந்தையும் எழுவது ஒன்றாலே.

தளராது முயற்சி செய்து நிற்க
தடைக்கற்களை உடைத்து தடயங்கள் பதிக்க
தன்னகத்தே என்றும் வேண்டும் தன்னம்பிக்கை
தயக்கும் துறந்து வெல்வாய் உலகையே.

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

# உலகத்தின் ஆதவன்

உழைப்பின் நாயகன்
உலகத்தின் உணவாளி
களைப்போடு இருந்தாலும்
சளைக்காத தொழிலாளி

உயிர்களுக்கு உயிர்த்துடிப்பாய்
உணவினைப் பயிரிட்டு
அயராத உழைப்பிலும்
அசராத விவசாயி

தரணியின் தயாளன்
தன்னம்பிக்கையின் குணாளன்
வரமாக உணவினை
உயிர்களுக்கு உணவிட்டான்



எஞ்ஞானம் வளர்ந்தாலும்
விஞ்ஞாம் விளைந்தாலும்
உணவில்லையேல் உயிர்கள்
உலகில் இல்லையே

ஆதவனோடு விடியலில்
சூழலும் உழவனே
உதிரமும் வியர்வையும் நிலத்தில்
சிந்தி வாழவைப்பான்

கவிஞர் தமிழ் நதி கிருஷ் அபி

# ஏக்கம்

வேதனைகள் பல வரினும் தாங்கிக் கொள்வேன்
ஆறுதலாய் நீ இருந்தால்

ஆனால், அந்த வேதனைகளுக்கு
வேராய் நீயே இருந்தால்
நான் என்ன செய்வேனோ?



கவிஞர் ஜோதி, பெரியகுமாரபாளையம்

# எனக்கு பிடித்த நபர்

உறவுகள் ஆயிரம் உண்டிங்கே
உளமது விரும்பிடும் நபர்யாரோ?
நெறியுடன் வளர்த்திடும் தாய்தந்தை
நெஞ்சதன் கூட்டிலே நெருக்கமன்றோ!

என்மனம் துள்ளிடும் இவர்கண்டால்
இனிமையின் உருவென இருக்கின்றார்
பொன்மனம் படைத்தநல் பேருள்ளம்
புன்னகை என்றுமே தவழ்ந்தாடும்



கவியதன் சுழியினைப் போட்டவளாம்
கற்பனைக் காதலி ஆனவளாம்
தவித்திடும் சிந்தையில் இவள்புரள
தாங்குமே காகிதம் கவிமகளை

அன்பினை மட்டுமே உணர்வுகளும்
அவளதன் மீதினில் பொழிந்ததுவே
அன்னையும் பலமுறை கேட்டாளே
அப்படி என்னவோர் பற்றென்று

காரணம் எதையுமே அறியேன்நான்
கருவறை பந்தமோ முற்பிறப்பில்?
வாரண வலிமையைத் தந்திடுமே
வந்தது கனவென இருப்பினுமே

இதமுடன் பழகிடும் இவள்பண்போ
ஈர்க்குமே காந்தமாய் இவள்பக்கம்!
இதயமும் சென்றதே அவளிடமே
இதுவரை ஆகியும் திரும்பவில்லை

பள்ளியில் அரும்பிய நேசமதும்
படிப்பினை முடித்துமே ஓயவில்லை
வெள்ளமாய் உணர்வுகள் பொங்கிடுமே
வெண்மனம் கொண்டவள் நினைக்கையிலே

கணினியில் பாடமும் எடுத்திடுவாள்
கரைந்திடா அன்பினில் கசிந்தவளும்
அணியென மாறியே ஆட்கொள்வாள்
அகத்தினுள் அமர்ந்தவள் சிரித்தபடி!

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

அகர முதல இலக்கிய பேரவை
அகரமும் தமிழே! முதலும் தமிழே!!

# பேரன்பின் யாசகி

மண்ணில் பிறந்தாய்
என்னுயிரில் கலந்தாய்
உறவின் உன்னதம்
உயிர்க் கோப்பையில் ஊற்றினாய்
என் புல்லாங்குழல்
இசையெங்கும் உன் வாசனை
என் புலன் யாவும் உன் ரோஜாக்கள்
சந்தேகமில்லை
ஆன்ம எல்லை தாண்டியும்
உனை நேசிக்கிறேன்
உன் புன்னகையைச்
சிந்திவிடாமல் சேகரிக்கிறேன்
உன் கைகோர்த்த
கணத்தின் புள்ளியில்
நேசநறுமணத்துள் கலந்த
காற்றானேன்
எனது எச்சங்களின் பிம்பங்களை
எனது எண்ணக்கருவறையின்
அதிர்வுகளை என் இதயத்தில் முகாமிட்ட
நினைவுக் கரங்களின் தேவைகளை
நீ மட்டுமே அறிந்திருக்கிறாய்
என் பிரபஞ்சம்
உன் மானசீக அச்சாணியில்தான்
நகர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது
உன் பேரன்பின் குளிர்சிறகுகளுக்குள் கொடுகிக் கிடக்கிறேன்
யுகங்கள் தோறும்
எனையாளும் தேவயோகம் நீ
என் முன்னும் பின்னும் சுற்றிலும்
எல்லாம் நின் முகமே
நின்றன் அன்பின் கடாட்சமே
தளர்ந்தும் உறைந்தும் நானாகிறவள்
சொட்டும் உயிர்த்தீயில்
உழல்கிறேன் என் வாழ்வின்
பூரணப்படுத்துதல் என்பது
உன்னால் மட்டுமே
என்றைக்கும் பேரன்பின்
யாசகி நான்.



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# விடையில்லா வினாக்கள்

தொழிலாளியாக இருப்பவன்
தான் முதலாளியாகும் போது
அவர்தம் உழைப்பை மதிக்காதேனோ?
கும்பாபிசேக விழாவில்
கூட்டமாக இருக்கும் என
கோவிலுக்கு செல்லாதோர்
குறித்த நடிகரின் படம் காண
கூட்டத்தில் முண்டுவதேனோ?
குச்சு வீட்டில் இருந்தோர்
மச்சு வாழ்க்கை கிடைக்கையில்
குடிசையில் வாழ்வோரை
குறைவாக நினைப்பதேனோ?
தான் வாழ தபசிருப்போர்
பிறர் வாழ்வதில் குமுறுவதேனோ?



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# விவசாயம்

காடு கருத்தரிச்சு
கல்லா பொறந்தது போல
வானம் வறண்டு போயி
வெயிலா பெய்யுதடி

கூழு கஞ்சி கூட
குடிநேரம் தள்ளிப்போட்டு
மாடும் ஏரும் தேடி
மனசெல்லாம் மருகுதடி

கானலு நீர் குடிச்சு
பயிறு வளந்து போச்சுன்னு
கருக்கலுல கண்ட கனா
மார்தட்டி சொல்லுதடி

வெறகுல வேகாத
சோத்துப் பருக்கையெல்லாம்
கருகுன ஈரக்குலய
காணாம போகுதடி

வேத்து கிரகத்துல
வாழ எடந் தேடி
றெக்க கட்டுன விஞ்ஞானம்
வானத்த அளக்குதடி

கடனுக்கு காட்டெழுதி
உடன்கட்ட ஏறாம
புள்ள போல பார்த்த நெலம்
புழுதிக்கு போச்சுதடி

விவசாய நெலத்தயெல்லாம்
கட்டிடங்க காவு வாங்க
உசுருள்ள மனுச பய
கல்லறய தேடுதடி



கவிஞர் அன்னலெட்சுமி சரவணன்,ஈரோடு

# அறிவியல் ஆக்கம்

அணுவும், அணுவும் இணைந்தால்
உருவாகும் பேராற்றல்;
அணு உட்கரு பிளந்தாலோ
உண்டாகும் மாபெரும் ஆற்றல்;
அனைத்தையும் ஆராய்ந்தறிந்த
மனிதா! உன் சின்னஞ்சிறு அதிசய மூளையின்
ஆற்றலை அறியாமல் போனது ஏன்?



நேர்மறை அயனியும், எதிர்மறை அயனியும்,
ஈர்த்துக் கொள்வதால்
பிறந்ததே எண்ணற்ற கனிகங்கள்;
ஆணுக்கும் பெண்ணுக்குமான
ஈர்ப்பும் இயல்பானதே
என்று நீ அறியாமல் போனது ஏன்?
ஈரணு இணைந்து ஓரணுவாகி அதுவே
பல்லாயிரம் அணுக்களாகிட,
உன் கைகளில் தவழ்வதோ
இவ்வுலகின் ஓர் புத்துயிரின் அறிமுகம்!

நாங்கள் மருந்திடுகிறோம்,
இறைவன் குணப்படுத்திடுவார்!
என்று சொல்லாத மருத்துவர் உண்டோ?
ஒன்பது மாதங்கள் மடியில் தங்கிடும்
குழந்தை ஐந்தே மாதங்களிலும் சிலருக்குப்
பனிக்குடம் கிழித்து வெளிவருகிறதே!
அதற்கான பதில்தான் என்ன?

இதோ இந்த உயிரற்ற ஒற்றை வைரஸ்
அதற்கோர் தீர்வில்லாமல்,
தடுப்பூசி, இரண்டு மூன்று என்று
எண்ணிக்கையில் நீண்டாலும் பலன்,
என்னவோ எழுபத்தைந்து சதவிகிதத்திலேயே
இன்னும் நிற்கிறதே;
கொரானாவும் உன்னைக் கிண்டல் செய்கிறதோ?

அறிவியல் ஆற்றல் பேராற்றல்,
அவ்வளவும் என்னாலே; என்று நீ சொல்வதே
அறிவிலித்தனம் என்று ஆகிடாதோ!
அனைத்துமே அவன் மலரடியில் சமர்ப்பித்திட,
அறிவியிலும் ஆகிடுமே ஆக்கபூர்வமானதாய்!

உன் அறிவியல் என்றென்றும்
ஆகட்டும் ஓர் பயனுறு கருவியாய்,
அப்பொழுதாவது ஹிரோஷிமா
நாகசாகிக்கள் சிதைந்திடாமல்
பூமியும் பூத்திடுமே,
என்றும் புத்துணர்வூட்டிடும்
சோலை வனமாக!

கவிஞர் மலர் அபி,சிதம்பரம்

# தமிழ் நாடு

செந்தமிழ் நாடென்னும் போதினிலே- இன்ப
தேன் வந்து பாயுதே - காதினிலே
தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டிற்கும்
அக்காலத் தொட்டும், இக்காலம் வரையிலுமே,
தமிழ் மண்ணுக்கும், தமிழுக்கும் பாடுபட்ட
மகான்களும், தீர்க்கதரிசிகளும் ஏராளமே!
நம் பாரதி பதினொரு மொழி கற்றதினிலே
தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும்
காணோமே என்று உணர்ச்சி ததும்ப பாடினார்.
'தமிழ் மொழி செம்மொழியாம்'
பைந்தமிழ், கன்னித்தமிழ், வண்ணத் தமிழ்
தமிழே, உன் திருவடியை சரணடைகிறோம்.
தமிழை தாங்கிய எம் திரு நாடே
நீ வளர்ந்து, வளர்ந்து வசந்தத்தை
வாரி இறைத்து புதுப்பொலிவுடன்
நீ திகழ்கிறாய்! திகழ்ந்து கொண்டே வளர்கிறாய்.
அன்று உனக்கு 1967
பிறந்த நாளாக அல்லவா?
கொண்டாடி மகிழ்ந்தோம்.
"தமிழன்" என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா
நம் தமிழர்கள் திக்கெட்டும்
உலகம் முழுக்க சாதனை
செல்வர்களாக மணம் பரப்பி
மணம் வீசிக் கொண்டிருக்கிறார்கள்
வாழ்க, நம் தமிழ் மண்ணின் மைந்தர்கள்.
வளர்க நம் தாய்த் திருநாடு.




கவிஞர் கிருஷ்ணவேணி. ஆ,ஊத்தங்கரை

# கரை சேராத கவிதை

ஓடி ஓடி வந்து
ஒரு ஓரம் எட்டிப்பார்க்கும்
சற்றே சலனம் வந்து
சத்தம் போடும்

உடைந்த வார்த்தைகள்
உருவம் கோர்த்து எக்காளம்
செய்யும்

மௌனம் மறுகரை
சென்று மனனத்திலே
மீண்டும் மௌனத்தில்

பேசமறந்த வார்த்தைகள்
பின்னால் கைகட்டி
கலைத்த சோர்விலே
கரை சேராத கவிதையில்



பின்னோக்கிய நேரத்தில்
அம்பகத்தின் ஏற்றம் இறக்கம்
ஆச்சரியக் குறியில்
அசைந்து அலையும்

சற்றே ஒதுக்காத நாழிகையும்
நைய்யாடி பேசும்
பெரிதாய் தோன்றாத பேச்சுகள்
பூதாகரமான புதராய்
இன்று மட்டும் கூடவரும்
நினைவுன் சாட்சியாய்

உரித்த வைகறையோ
இன்னும் புதுப்பெண்ணாய்
இடம் வலம் சுற்றுது

முற்றுப் பெறாத
வெள்ளைக் காகிதமே
வாழ்க்கை
ஓரத்தில் வெற்றிடும்
பளிச்சென படுத்து
படுத்தி எடுக்கும்

ஏக்கத்தின் சாயல்
இறங்க மறுத்து
தேடலுக்குள் தொலையும்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# காத்திருத்தல்

நசநசத்து தெருவெங்கும்
ஓடை பேச்சாகிப் போனது
சற்றுப் பெருத்தும் தள்ளாடாது
தரையிறங்குது மழை
இரவெல்லாம் இடிச்சத்தம்
இதயம்வரை தடதடக்குது
குறட்டை ஒலி மத்தியில்
பிண்ணனி இசையாகிப் போனது
மின்னிமின்னி
மின்சாரம் பாய்ச்சிப் போகுது
மின்வெட்டு கால பொழுதுகளில்
காற்றின் கூச்சலில்
காதோர ரகசியம்
திசை விலகிப் போனது
நாளைய அலுவல்
நாற்புறமும் மனமழுத்தி,
ரசிக்காத பொழுதுதந்து
விரல்தழுவி நழுவிவிடும்
மழைத்துளியாகி கழன்றது!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# கூடுகளற்ற வானம்பாடி

கிடைத்த
நொடிகளில்
கிளிப் பேச்சு
கேட்டேன்
சேட்டைகள்
செய்யவில்லை

கிள்ளைமொழி கேட்பின்
கள்ளமொழி இல்லை




மலரோ மதுவோ
மங்கைதன்
மனம் தொடல்
ஆண்மை

கூடுகளற்ற
பறவையானோம்
வானம்
நம் காலில்
வசந்தம் பாடியதடி!

கவிஞர் ஆர்.மோகன்ராஜ்,சென்னை

# மூச்சுக்காற்று

அழகான உன் மூச்சுக் காற்றை
ஆழமாக ரசித்தவனாய்
என் இரவுகள் கழிகிறது என்னவளே!



கவிஞர் மதீரா(அறிவிப்பாளினி),இலங்கை

# ஆட்கள் தேவை

இங்கு சொற்பொழிவு ஆற்றிட ஆட்கள் உண்டு
இங்கு விவாதம் புரிந்திட ஆட்கள் உண்டு
இங்கு ஓடி ஓடி உழைத்திட ஆட்கள் உண்டு
இங்கு ஒய்யாரமாய் படுத்து உறங்கிட ஆட்கள் உண்டு
இங்கு கஞ்சி குடித்து காட்டைத் திருத்தபவனும் உண்டு
இங்கு கரைவேட்டிக்கட்டி நாட்டை அழிப்பவனும் உண்டு
இங்கு வம்பு செய்திட ஆட்கள் உண்டு
இங்கு குடிப்பவனும் உண்டு
இங்கு குடிக்காதவனும் உண்டு
இங்கு அடுத்தவன் குடியை கெடுத்திட கூட ஆட்கள் உண்டு

ஆனால் இங்கு அடுத்தவன் பேச்சை
செவி கொடுத்து கேட்டிடத்தான் ஒரு நாதியும் இல்லை.
இங்கு ஆட்கள் தேவை தானே.



கவிஞர் கு.ரமேஷ்குமார் & ரமேஷ்யோகி,மதுரை

# திருஞானசம்பந்தர்

(தொடர்ச்சி - 2)



பரசமயக் கோளரியார்! விருதுற்றார் "சமயக்குர
வ"ரென்றே! மறையதுவும் நீறினொடு ஐந்தெழுத்து
நிலைத்திடவே காரணரே! பதினாறு ஆயிரமென
பதிகங்கள் பாடியதாய்ச் செப்புவரே! முன்னூற்று
எண்பத்து நான்களவு பதிகங்களே கிடைத்துளதாம்!
முதலாவது திருமுறையில் ஆயிரத்து நானூற்று
அறுபத்து ஒன்பதான பாடல்கள்; இரண்டாவது
திருமுறையில் இரண்டாயிரத் தெண்ணூறு பாடல்களும்;
மூன்றாவது திருமுறையில் நாலாயிரம் நூற்றோடு
ஐம்பத்து எட்டான பாடல்களும் எனுமளவில்
பத்தாயிரம் நானூற்று இருபத்து ஏழுமட்டில்
கிட்டிற்று! மூன்றுவயது சிற்றகவை இளங்குழந்தை
பதினாறு சீரகவை எட்டும்வரை பதிமூன்று
ஆண்டுகளே பொழிந்திட்டார் பதிகமெலாம்! திருக்கொள்ளம்
புதூரதனில் நற்கொட்டமே கமழ்கின்ற கொள்ளம்புதூர்
பாடியவர் ஓடத்தைச் செலுத்தினார்! திருப்பூந்துரித்
திருத்தியதனில் நாவுக்கர சர்சந்திப் புகொண்டாரே!
சீர்தொண்டை நாட்டகத்து திருவோத்தூர் சிவனடியார்
ஆண்பனைகள் "பூந்தேர்ந்து தாயனகொண் டுநின்பொன்னடி "
திருப்பதிகம் பாடியவர் பெண்பனையாய் ஆக்கினாரே!
நற்சுந்தரர் திறந்ததனைச் சம்பந்தர் மூடித்தான்
திறந்தாரே! இயலிசைத்தமிழ்ப் பதிகவகை யாப்பதுவே!
பதிகமெனல் பத்துபாடல் தொடுப்பதுவே! தேவாரம்
ஈசன்மேல் வடித்ததுவே! தேவாரக் காலத்து
இசைக் கருவிகள்: யாழ்,வீணை, குழல், கின்னரி,
மிருதங்கம், தத்துவகம், கொடுகொட்டி, துடி,கொக்கரி,
சச்சரி,தக்கை, முழவம், மொந்தை,உடுக் கை,தாளம்,
துந்துபி,முரசம், மத்தளம், தமருகமென இருபதுக்கும் மேற்பட்டவை!
பற்பலவூர் திகழீசனார் போற்றிமூவர் தேவாரம்!
சம்பந்தர் யாத்ததுவே பாச்சுவைதான் மிக்கதுவே!

(முற்றும்)

கவிஞர் கணக்காயன் (இசே இராமன்)

# விடையில்லா வினாக்கள்

தொழிலாளியாக இருப்பவன்
தான் முதலாளியாகும் போது
அவர்தம் உழைப்பை மதிக்காதேனோ?
கும்பாபிசேக விழாவில்
கூட்டமாக இருக்கும் என
கோவிலுக்கு செல்லாதோர்
குறித்த நடிகரின் படம் காண
கூட்டத்தில் முண்டுவதேனோ?
குச்சு வீட்டில் இருந்தோர்
மச்சு வாழ்க்கை கிடைக்கையில்
குடிசையில் வாழ்வோரை
குறைவாக நினைப்பதேனோ?
தான் வாழ தபசிருப்போர்
பிறர் வாழ்வதில் குமுறுவதேனோ?



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# பெண்ணே ஒரு புயலாக

பெண்ணின் நெஞ்சம் பூவாகும்
புரியாத சிலருக்கு முள்ளாகும்
பெண்ணின் பெருமை புரிவதில்லை
அதைச் சொல்ல வார்த்தை இல்லை
ஊர் வாயை மூட முடிவதில்லை
உண்மைக்கு விளக்கம் தேவையில்லை
நேர்மையின் சிகரம் நீதியின் மறு உருவம்
நம்பிக்கை துணையிருக்க
நல்லவர்கள் உடனிருக்க
சிந்தனையும் செயலும் கலந்திருக்க
பல வில்லன்களை பார்த்திருக்க
சில வில்லிகள் கூட இருக்க
கதாநாயகியாய் நானே இருக்க
பல கஷ்டங்களை கடந்து வந்திருக்க
வெற்றிகையில் இருக்க
வெல்ல வேண்டும் என்ற எண்ணம் நெஞ்சில் இருக்க
கடவுள் துணை இருக்க
மதிப்பு மரியாதை கூடியிருக்க
பல மாற்றம் நடந்திருக்க
கனவா நினைவா என புரியாமல் நான் இருக்க
பல சாதனைப் பெண்களையும் நாம் பார்த்திருக்க
பல முன்னேற்றங்கள் நாடு அடைந்திருக்க
பெண்களின் கால் தடம் பலதுறையில் பதிந்திருக்க
அதனாலே பெருமை கிடைத்திருக்க
பெண்ணே நாட்டின் கண்களாய் மாறி இருக்க
பெண் என்ற வார்த்தைக்கு அர்த்தம் புரிந்திருக்க



கவிஞர் சௌ.தாரா,சேலம்

# நீ வருவாய் என்றால்

நீ எனக்குள் எப்படி இருந்தாய் என்பது
காயம் ஆறிய பின்னும் மறையாமல்
நிலைக்கும் வடு கரைகள்

ஆமா
உலகம் ரொம்ப பெருசு!
ஆனா
அவளையே சுத்துது மனசு!

கனவில் நீ வருவாய் என்றால்
இறந்து போகும்வரை
உறங்கிப்போவேன்.

புரட்சியும் புன்னகை தான் .
துரோகியை பார்த்து நகைக்கும்
போர்களமும் காதல்களம் தான்
தோட்டாவை நெஞ்சிலே வாங்கும்.



கவிஞர் மரு.சு.டேனியல் ராஜ சுந்தரம்,வீருப்பு,சங்கரன் கோவில்

# பார்வை

இரவின் மடியில் தெரிகிறது
அவ்வளவுப் பெரிய
உலகத்தை
ஓரேப் பார்வையில்
பார்க்க முடிகிறது
அந்த
நீல நிறத்தில் எரியும்
பூஜ்ய விளக்கு,
சிறியப் பிம்பத்திலும்
பெரியப் பார்வை
சில நேரங்களில்
சாத்தியமாக தான் செய்கிறது.



கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே!

திருவாடிப் பூரத்தில் வளர்பிறை சதுர்த்தியிலே,
நந்தவனத்தில் நாற்றத்துழாய் மாடத்தின் அருகினிலே
பெரியாழ்வார் கண்டெடுத்த பெண்குழந்தை - கோதையவள்!
துவாபர யுகத்தில் வடமதுரை மைந்தனாய்
ஆயர்குலத்தின் அணிவிளக்காய்த் திகழ்ந்த கண்ணனை
கோதையவள் தன் மனத்தில் வரித்தாள்!
ஆச்சியர்குலப் பெண்ணாகவே தன்னை உணர்ந்தாள்!
அவர்களைப் போலவே கொண்டை முடிந்தாள்!
பெருமாள்மேல் அவளுக்கு பெருக்கெடுத்தது பக்தி!
உருமாறியது காதலாய்! காதல் கொண்டவள்
உருகினாள் !கடிமணம் செய்தாள் கனவிலே!
பெரியாழ்வார் தொடுத்து வைக்கும் மாலைகளை
அரங்கன் அணியுமுன்னே தானணிந்து கழற்றிடுவாள்!
ஒருநாள் அதைக்கண்ட பெரியாழ்வார் கடிந்துரைக்க
பெரியாழ்வார் கனவில் பெருமாள் தோன்றி
ஆண்டாள் சூடிக்கொடுத்ததே தான்சூட விருப்பமென்றார்!
கோதையவள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றானாள்!
அரங்கனே என் மணாளன் என்றுரைத்தாள்!
ஆடிப்போனார் பெரியாழ்வார்! மீண்டும் ஒருகனவு!
உன்மகள் ஆண்டாள் தெய்வப்பிறவி! அவளை
நானேற்கும் காலம் கனிந்ததனால், திருவரங்கத்திற்கு
அழைத்து வாவென அருளினார்! பெரியாழ்வாரோ
அரங்கனவர் வில்லிபுத்தூருக்கு ஆண்டாளை மணமுடிக்க
வரவேண்டுமென வேண்டினார்! பங்குனி உத்திரத்தில்
அரங்கனுக்கும் கோதைக்கும் அரங்கேறியது திருமணமே!
திருப்பாவை மட்டுமின்றி ஒருநூற்று நாற்பத்து
ஒருமூன்று பாசுரங்கள்! சொற்சுவையும் பொருட்சுவையும்
நிறைந்திருக்கும் திருப்பாவை வேதமனைத்திற்கும் வித்தாகும்!
வாரணமாயிரத்தை கன்னியர்கள் தினம் பாட
திருமணம் கைகூடும்! விருப்பம்போல் வாழ்வமையும்!
திருவாடிப் பூரத்து செகத்துதித்தாள் வாழியவே!



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# கவிஞர் வாணிதாசன்

(கட்டுரை)

**பிறப்பு :**



புதுச்சேரிக்கு(பாண்டிச்சேரி) அருகில் உள்ள வில்லியனூர் என்னும் ஊரில் தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட திருக்காமு, துளசி அம்மையாருக்கு 1915 ஆம் ஆண்டு ஜூலை 22 ம் தேதி பிறந்தார்.

**கல்வி:**

1922 ஆம் ஆண்டு வில்லியனூர் திண்ணைப் பள்ளியில் ஆரம்பக்கல்வி, 1924 ஆம் ஆண்டு மையப்பள்ளியில் அங்கு பிரெஞ்சு, தமிழ் கற்பிக்கப்பட்டன.

தந்தை பணி மாற்றம் காரணமாக புதுச்சேரியில் நான்காம் வகுப்பு நான்காம் வகுப்பு பயின்று வந்தார். அப்போது பாவேந்தர் பாரதிதாசன் வகுப்பு ஆசிரியர். மேலும் சி.சு.கிருஷ்ணன் எல்லப்ப வாத்தியார், முத்துக்குமாரசாமி பிள்ளை ஆகியோர் ராமசாமியின் தமிழார்வத்தை வளர்த்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

1928 ஆம் ஆண்டு பதின்மூன்றாவது வயதில் மைய இறுதித்தேர்வில் புதுவை வட்டாரத்திலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார்.

1932 -ல் பிரெஞ்சு மொழிக்கல்வி முதல் பகுதி சான்றிதழ் தேர்வை எழுதி அதிலும் நல்ல மதிப்பெண்களை எடுத்தார்.

1934 -ல் பிரவே என்னும் தமிழ் பண்டிதர் தேர்வை எழுதுவோருக்காக பாவேந்தர் பாரதிதாசன் தனிப்பட்ட வகுப்பு நடத்தி வந்தார் அதில் பயின்ற ராமசாமி இத்தேர்விலும் வெற்றி பெற்று ஆசிரியர் பணிக்கு தகுதியானார்.

**கல்வி:**

1937 ஆம் ஆண்டு அப்போதைய பதுவை நகரமேயர் இரத்தினவேலு பிள்ளை என்னும் பெரியவரின் பரிந்துரையின் பேரில் உழவர்கரையை அடுத்த பேட்டில் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார்.

**முதல் கவிதை :**

பள்ளி ஆசிரியராகப் பணியாற்றஇய ராமசாமி, மகாகவி சுப்பிரமணிய பாரதியின் நினைவு நாளையொட்டி பாரதி நாள் இன்றடா! பாட்டிசைத்து ஆடடா! எனத் தொடங்கும் முதல் கவிதையை மதுரையிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த சி.பா.ஆதித்தனாரின் திங்கள் இதழான தமிழன் இதழ் வெளியிட்டது.

இவ்விதழுக்கு தொடர்ந்து கவிதைகளை எழுதிவந்த ராமசாமி "ரமி" என்னும் புனைப்பெயரில் கவிதைகளை அனுப்பினார். இப்பெயரை விரும்பதா தமிழன் நிர்வாகம் வாணிதாசன் என்னும் புனைபெயரில் எழுதுமாறு கேட்டுக்கொணடது. இதனை ஏற்ற ராமசாமி வாணிதாசன் ஆனார்.

**பாரதிதாசன் - வாணிதாசன்:**



நான்காம் வகுப்பு ஆசிரியர், பிரவே தேர்வு பயிற்சி ஆசிரியர் என்னும் நிலைகளைத் தாண்டி உள்ள உணர்வுகளால் இருவருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது.(1944) கால கட்டங்களில் எப்போதும் பாரதிதாசனோடு இருப்பவராய் வாணிதாசன் மாறிப்போனார்.

1944 ஆம் ஆண்டு குறும்பகரம் பள்ளியின் பணியாற்றிபோது "விதவைக்கொரு செய்தி" என்னும் தலைப்பில் அமைந்த நான்கு வெண்பாக்கள் அறிஞர் அண்ணார் நடத்திய திராவிட நாடு இதழில் முகப்பு அட்டையில் வெளியிடப்பெற்றது. மேலும், அண்ணாவும் வாணிதாசனைப் பாராட்டி எழுதினார்.

1945 -ல் மீண்டும் பாகூருக்கு மாற்றப்பெற்று, சென்னையில் வித்துவான் பட்டம் பெற்றார். இதன்மூலம் 1948ல் புதுச்சேரி கல்வே கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றார்.

**திருமணம்:**

1935 ஆம் ஆண்டு தமது இருபதாம் வயதில் தம் சிற்றன்னையின் தமையன் மகள் ஆதிலட்சுமியை மணந்தார். ஆண்களும், பெண்களுமாக மொத்தம் ஒன்பது குழந்தைகளைப் பெற்றிருந்தார் கவிஞர் வாணிதாசன்.

**இலக்கியப்பயணம்:**

தமிழன் இதழ் மூலம் தொடங்கிய இலக்கியப் பயணம் திராவிட நாடு இதழின் மூலம் சிறப்பான புரட்சிக்கவிஞராய் அடையாளம் காணப்பட்டார். இதனால் முரசொலி, முத்தாரம், மன்றம், தென்றல் போன்ற திராவிட இயக்கப் பத்திரிக்கைகள் அவரின் கவிதைகளை கேட்டு வாங்கி வெளியிட்டு வந்தன.

அரசியலில் ஏற்பட்ட ஆர்வத்தினால் புரட்சியாளர் பெரியாரின் தன்மான இயக்கத்தில் பாரதிதாசன் முழக்கமிட்டதால் அவரின் சமுதாய உணர்வு அவரின் பரம்பரையினரையும் அதில் இணைத்தது.
பட்டம்: மயிலை சிவமுத்து என்பவரால் தமிழ்நாட்டுத்தாகூர் என்று அழைக்கப்பெற்றார்.

**சிறப்பு பெயர்கள்:**

கவிஞரேறு, பாவலர் மணி, தமிழகத்தின் வேர்ட்ஸ்வோர்த், தமிழ்நாட்டுத் தாகூர் போன்ற சிறப்புப் பெயர்களும் இவருக்குண்டு.

இவருடைய கவிதைகள் உருது, ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

# கவிஞர் வாணிதாசன்

(கட்டுரை)

## நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்:

01. இரவு வரவில்லை
02. இன்ப இலக்கியம்
03. இனிக்கும் பாட்டு
04. எழில் விருத்தம்
05. எழிலோவியம்
06. குழந்தை இலக்கியம்
07. கொடி முல்லை
08. சிரித்த நுணா
09. தமிழச்சி
10. தீர்த்த யாத்திரை
11. தொடுவானம்
12. பாட்டரங்கப் பாடல்கள்
13. பாட்டு பிறக்குமடா
14. பெரிய இடத்துச் செய்தி
15. பொங்கற்பரிசு
16. வாணிதாசன் கவிதைகள்-முதல் தொகுதி
17. வாணிதாசன் கவிதைகள்-இரண்டாம் தொகுதி
18. வாணிதாசன் கவிதைகள்-மூன்றாம் தொகுதி
19. விட்டர் விகோவின் ஆன்ழெல்லோ

**வாணிதாசன் இயற்றிய நூல்கள்**
- எழிலோவியம்
- தீர்த்த யாத்திரை
- இன்ப இலக்கியம்
- பொங்கல் பரிசு
- இரவு வரவில்லை
- சிரித்த நுணா
- வாணிதாசன் கவிதைகள்
- பாட்டரங்கப் பாடல்கள்
- இனிக்கும் பாட்டு
- எழில் விருத்தம் (விருதப்பாவிற்கு இலக்கணமாய்த் திகழ்வது)
- பாட்டு பிறக்குமடா (தமிழக அரசு பரிசு)
- குழந்தை இலக்கியம்
- பெரிய இடத்து செய்தி (மாப்பசானின் சிறுகதையை தமிழில் மொழிபெயர்த்தது)
- காதல் எங்கே (விட்டர் விகோவின் ஆன்ழெல்லோ)
- விதவைக்கொரு செய்தி

**தொடர்கதைகள்**
- வாழ்க்கை
- பட்டிக்காட்டுப் பெண்

**கட்டுரைகள்**
- கருங்காலம்
- கவிதையில் வினாவும் விடையும்

**காப்பியங்கள்**
- கொடிமுல்லை
- தமிழச்சி
- தொடுவானம் (இசைப்பாடல் பற்றியது - 51 இசைப்பாடல்கள்)

## மறைவு:

07.08.1974 ஆம் ஆண்டு மறைந்தார்

நன்றி : https://www.dinamani.com



கவிஞர் அ.வில்சன்,இதழாசிரியர்


அகர முதல
நாளை நமதே
அகர முதல
உரக்க சொல்வோம்
தேதி போல
உங்கள் கவலைகளை
தினமும் கிழித்து
எரிந்து விடுங்கள்
ஒவ்வொரு நாளும்
உங்களுக்கானதாக
எண்ணி புதிதாய் வாழுங்கள்
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.


தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com